**In the Fast Track Court (Magisterial Level) at Kovilpatti.**
**Dated: 08.06.2026**
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.PC)
**C.C. No. 64/2018**
**Witness– D.W–3**

| | |
|---|---|
| Name | : பகத்சிங் |
| Father's name | : காளிதாஸ் |
| Address | : 5/45 தெற்குத்தெரு, ஒட்டநத்தம், |
| Age | : 41 |

**(Witness has been administered Oath U/s 3 of the Oaths Act 1969)**

(1969ம் ஆண்டு ஆணைமொழிச் சட்டத்தின்படியும், 1872ம் ஆண்டு இந்திய சாஷ்சிய அத்தியாயம் 10 மற்றும் குற்றவியல் நடைமுறை விதி 36ன்படி சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது)

(Complainant present. Accused present.)

<u>புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

3. எனது சொந்த ஊர் ஒட்டநத்தம். நான் குட்டியானை வண்டி சொந்தமாக வைத்து வாடகைக்கு ஓட்டுவேன். நான் 10 வருடமாக டிரைவராக இருக்கிறேன். எதிரி சந்தனராஜ் சொந்தமாக லாரி வைத்து தொழில் செய்கிறார் என்றால் சரிதான். நான் ஓட்டுநராக இருப்தால் நானும் எதிரியும் வேலையை பகிர்ந்து கொள்வோம் என்றால் சரியல்ல. எதிரி, ராகவன் என்பவரிடம் ரூ.1,50,000/– கடன் வாங்கியதாக எனது முதல் விசாரணையில் நான் சொன்னது பொய் என்றால் சரியல்ல. நான் அவ்வாறு சொல்வது உண்மையாக இருந்தால் தேதி சரியாக குறிப்பிட்டு சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல, 2017ம் ஆண்டு அன்று 10 வருடம் ஆகிவிட்டதால் சொல்லியுள்ளேன்.

4. நான் முதல் விசாரணையில் சொன்ன காசோலையின் கிளை பெயர் தெரியுமா என்றால் தூத்துக்குடி இன்னாசிபுரம் கிளையை சார்ந்தது. இந்த வழக்கிற்கு சாட்சியம் அளிக்க எதிரி என்னை அழைத்தார் என்றால் சரிதான். எதிரி எனக்கு உறவினர் கிடையாது, ஆனால் ஒரே சமூகத்தை சார்ந்தவர். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எதிரி, ராகவனிடம் பணம் வாங்கி திருப்பி செலுத்தியதாக கூறப்பட்டுள்ள விவரங்கள் பொய்யான சாட்சியம் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளது உண்மையானது என்றால் எதிரியும் சாட்சியம் அளித்திருப்பார் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னது பொய் என்பதால் தான் மற்ற சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

5. ராகவன் எனக்கு நண்பர் கிடையாது என்றால் சரியல்ல. ராகவன் உண்மையில் எனக்கு நண்பராக இருந்தால் அவர் இறந்த தேதியை சரியாக குறிப்பிட்டு சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல, அவர் இறந்த சமயம் நான் ஊரில் இல்லை. எதிரி, ராகவனிடம் கடன் பெற்றதாக கூறப்பட்டுள்ள நிலையில் ஆவணங்களில் நீங்கள் சாட்சி கையொப்பம் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல, எதிரி காசோலை கொடுத்தார். நான் எதிரிக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு ஆதரவாக எதிரி இல்லாத நபரிடம் கடன் பெற்றுள்ளதாக கூறினேன் என்றால் சரியல்ல. ராகவனுக்கு மனைவி உள்ள விவரம் எனக்கு தெரியும், அவரை சாட்சியாக விசாரிக்கலாம். ராகவனின் மனைவிக்க இந்த வழக்கு விவரம் தெரியாது.

**<u>மறு விசாரணை இல்லை</u>**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Fast Track Court(ML),
Kovilpatti(FAC).